**செய்தி வெளியீடு எண்: 51/2024** **நாள்: 22.07.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

## சின்னமலை மெட்ரோ இரயில் நிலையம் முதல் ITPC IT பூங்கா வரை மெட்ரோ இணைப்பு வாகன சேவை

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இணைப்பு வாகன (Metro Connect) சேவைகள் சென்னை முழுவதும் உள்ள பல IT பூங்காக்களில் தொடங்கப்பட்டுள்ளன. சென்னை பயணிகளுக்கு அவர்களின் பணியிடத்திலிருந்து அருகிலுள்ள மெட்ரோ இரயில் நிலையத்திற்கு இணைப்பு வாகன சேவை வழங்கப்படுகிறது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், M/s Capitaland Investments மற்றும் M/s New Travel Liines நிறுவனத்துடன் இணைந்து தரமணியில் அமைந்துள்ள ITPC IT பூங்கா வில் பணிபுரிவோரின் போக்குவரத்து வசதிக்காக குளிரூட்டப்பட்ட மெட்ரோ இணைப்பு வாகன சேவையை தொடங்கியுள்ளது.

இந்த சேவையை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), இன்று (22.07.2024) தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின் போது, M/s Capitaland Investments நிறுவனத்தின் துணை நகரத் தலைவர் திரு. ரோஹித் சந்தோஷ், திரு. கோபிநாத் மல்லையா, தலைமை ஆலோசகர் (இயக்கம் மற்றும் பராமரிப்பு), திரு. எஸ். சதீஷ்பிரபு கூடுதல் பொது மேலாளர் (தொடர்வண்டி மற்றும் இயக்கம்), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், M/s Capitaland Investments மற்றும் M/s New Travel Liines நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

சின்னமலை மெட்ரோ இரயில் நிலையம் முதல் ITPC IT பூங்கா இடையே தோராயமாக 6 கி.மீ தொலைவிற்கு, சாலை போக்குவரத்து நெரிசலின் அடிப்படையில் 25 முதல் 30 நிமிட இடைவெளியில் மெட்ரோ இணைப்பு வாகன சேவை இயக்கப்படும். திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரையிலும், மாலை 5.30 மணி முதல் இரவு 09.30 மணி வரையிலும் இச்சேவை இயக்கப்படும்.

IOS மற்றும் Android மொபைல்களில் G-TAXIE செயலி மூலம் பயணிகள் மெட்ரோ இணைப்பு வாகன சேவையை பயன்படுத்திக்கொள்ளலாம். ஒரு பயணத்திற்கு ஒரு நபருக்கான கட்டணம் ரூ.50 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இணைப்பு வாகன சேவை தினசரி பயணம் மேற்கொள்பவர்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**